மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசுக்கு என்ன கடமை, மற்றவர்களுக்கு என்ன கடமை என்று இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னது ஒழுக்கத்தின்பாற்பட்டது. "இனிய உளவாக இன்னாத கூறல் கனி இருப்பக் காய் கவர்ந்தற்று" என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறார். இப்போது குரங்குகள் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை என்று முதலிலேயே சொன்னேன்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : வயல் வெளிகளில் எலிகள் ஏராளமாக இருந்து தொல்லை கொடுக்கின்றன. அந்த வயல் வெளிகளில் உள்ள பாம்பு இனங்கள்தான் எலிகளைப் பிடித்து ஒழித்து வருகின்றன. அங்கு இருக்கும் பாம்புகளைப் பிடிக்கின்ற காரணத்தால், எலித் தொல்லை அதிகமாகும் என்ற காரணத்தால் பாம்புகளைப் பிடிக்காமல் தடைசெய்வது பற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இது தவளைபற்றிய கேள்வி. இப்போது தவளையிலிருந்து பாம்புக்குத் தாவியிருக்கிறது. எலிகளைப் பிடிக்கும் பாம்புகள் பல விஷமற்ற பாம்புகள். "பாம்பு என்றவுடனே படையும் நடுங்கும்" என்பதுபோல் மக்களுக்குப் பயம் இருக்கலாம். ஆனால் எல்லாப் பாம்புகளையும் பிடிப்பதில்லை. காடுகளில் உள்ள பாம்புகள்தான் பிடிக்கப்படுகின்றன.

THIRU K. VINAYAKAM : It is seen from the answer given by the Hon. Minister that the income from the export of frog's legs to other countries is tantalisingly negligible. Is it through the public sector or private sector that the income is calculated to be very low ? Is the Government aware of the fact that private agencies are employed in the State of Madras to catch frogs from ponds and wells and send them to Kerala for processing and sending to foreign countries and earning foreign exchange and will the Government think of the possibility of the Government themselves undertaking this work and earning the foreign exchange that is now earned by Kerala ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தவளை ஏற்றுமதியை யார் செய்கிறார்கள் என்ற விவரக் குறிப்பு இல்லை. இதை ஏற்றுமதி செய்வதிலே அதிக லாபம் கிடைக்கும் நிலைமை ஏற்படுமானால், அதை அரசே ஏற்றுமதி செய்வதுபற்றிப் பரிசீலனை செய்யலாம்.

அரசினர் புதிய பேருந்துத் தடங்கள்

***202 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் வட்டத்திலும், மதுராந்தகம் வழியாகவும் 1–3–1967 முதல் எத்தனை புது வழித் தடங்களில் அரசினர் பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தமிழக அரசு போக்குவரத்துத் துறை 1–3–1967 முதற்கொண்டு மதுராந்தகத்தின் வழியாகச் செல்லும் வகையிலோ அல்லது மதுராந்தகத்தில் முடிவடைகின்ற வகையிலோ ஆறு பேருந்து வழித்தடங்களில் கடுவிசைப் பேருந்துகளையும் சாதாரணப் பேருந்துகளையும் ஓட்டி வருகின்றது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : இந்தப் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு நாட்டுடைமையாக்கப்பட்டது தவிர, வேறு எவ்வளவு புது வழித்தடங்கள் விடப்பட்டிருக்கிறது ?

1968 மார்ச் 13]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது அந்த விவரங்கள் இல்லை. 16-ம் தேதி நடைபெறவிருக்கிற மானியக் கோரிக்கையின்போது முழு விளக்கங்களும் அளிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, what is the number of private buses that have been withdrawn from operation in the Dharmapuri district and the number of Government buses introduced there ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது இந்தக் கேள்வியில் இடம்பெற வில்லை.

சர்க்கார் வாகனங்களுக்கான பெட்ரோல்

*203 வினு—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சர்க்கார் உபயோகப்படுத்தும் ஜீப், வான் முதலிய வாகனுதிகளுக்கு இந்தியன் ஆயில் கம்பெனி விநியோகிக்கும் பெட்ரோல் உபயோகப்படுத்தப்படுகிறதா ?

(இ) இல்லையென்ருல் அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு ஏ. எம். ராஜா : தமிழக அரசின் வாகனங்களுடைய எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிற நிலையில், தமிழக அரசு சொந்த பெட்ரோல் பங்குகளை ஏற்படுத்த முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தியன் ஆயில் கம்பெனியிடமிருந்து எண்ணெய் வாங்குவதுபற்றிய கேள்வி தொடக்கக் கேள்வி. இந்தக் கேள்விக்கு இதில் இடமில்லை.

திரு. கே. விநாயகம் : நம் பேருந்து வண்டிகள், ஜீப்கள் இவை நாடு முழுவதிலும் இருக்கின்றன. இந்த வண்டிகளுக்கு வேண்டிய டீஸல் ஆயில், பெட்ரோல் மற்றவையெல்லாம் இந்தக் கம்பெனி பங்குகள் எங்கெங்கு இருக்கிறதோ அங்கு வாங்குகிருர்கள். பல ஊர்களில் பங்குகள் இல்லாத இடங்கள் இருக்கலாம். அங்கெல்லாம் என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன ? தனிப்பட்டவர்களிடமிருந்து வாங்குகிருர்களா ? அப்படி பங்குகள் இல்லாத இடங்களில் பங்குகள் வைக்க இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனைக் கேட்கமுடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஐ.ஓ.ஸி.-யில் எண்ணெய் வாங்குவதின்மூலம் குறிப்பாக நம் தமிழக அரசு போக்குவரத்துத் துறையில் உள்ள வண்டிகளுக்கு எண்ணெய் வாங்குவதின்மூலம் சில சலுகைகள் அளிக்கப்படுகின்றன. ஐ.ஓ.ஸி.யிடமிருந்து எண்ணெய் பெறமுடியாத இடங்களில் தனியார் வைத்திருக்கும் அமைப்புகளிலிருந்து எண்ணெய் பெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : ஐ.ஓ.ஸி.-யிலிருந்து எண்ணெய் வாங்குவதில் சலுகைகள் அளிக்கிருர்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அந்தச் சலுகைகள் என்ன என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது கிலோ லிட்டருக்கு ஐந்து பைசா குறைத்துக் கொள்கிருர்கள். கிலோ லிட்டர் என்பது 1,000 லிட்டர். அங்கேயே நாம் ஒழுங்காக அவ்வப்போது யில் தொகையைக்